---

## 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெச்சுரல் ரிசோஸ்  மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரித்து மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும்  அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 3.8, 3.9 மற்றும் 4.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் தற்போதய தேறிய பெறுமதி நடைமுறைச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேணடிய போதிலும் சொத்துக்களின் பதிவுசெய்யப்பட்ட பெறுமதி நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 39(1) ஆம் பிரிவு | கம்பனியின் பணிப்பாளர் சபை வரிசை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களினால் நியமிக்கப்பட்ட பங்கு முதலீட்டுப் பணிப்பாளர்களினை உள்ளடக்கிய 07 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டிய போதிலும், தற்போதைய | கம்பனியின் பொதுச் சபை கூட்டத்திற்கு பங்குதாரர்களாக இலங்கை மஹாவலி அதிகாரசபை மாத்திரம் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்ததுடன் ஏனைய இரண்டு பங்குதாரர்கள் சமூகமளிக்காமை மற்றும் முன்மொழிவுகள் சமர்பபிக்கப்படாமை காரணமாக, | 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகார சபையின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிப்பாளர் சபையின் இரண்டு பேருடன் கூடிய கம்பனியின் பணிப்பாளர் சபை இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தனர். | மஹாவலி அதிகாரசபைக்கு பணிப்பாளர்களை நியமிக்க வேண்டியேற்பட்டது.. | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| i | 5.1.3 ஆம் பந்தி | கம்பனியை தாபிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக கூட்டிணைந்த திட்டம் கூட்டிணைக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டில் கம்பனியை கலைப்பதற்கு நிர்மாணிக்கப் பட்டதிலிருந்து, கம்பனி எவ்வித செயற்பாடுகளையும் நிறைவேற்ற கம்பனி பொறுப்பேற்றிருக்க வில்லை. ஆகையினால், 2019 ஆம் ஆண்டிற்காக எவ்வித கூட்டிணைந்த திட்டமொன்றும் தயாரிக்கப்படவில்லை. | கலைக்கப்படும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii | 6.5.1 ஆம் பந்தி | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது . | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 03 ஆம் இலக்க | கம்பனிகளின் வகைகளின் “F” உப வகையின் வரம்பின் கீழ் | உரிய அங்கீகாரத்தைக் கோரி திறைசேரி | சுற்றறிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவு | வருகின்ற அரச உடைமையைக் கொண்டுள்ள கம்பனிகள் தலைவரின் மாதாந்தப் படிகளைச் செலுத்துவதற்கு வரிசை அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதும். இருப்பினும், 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரை கம்பனியின் தலைவர் பெற்றுக்கொண்ட ரூபா 1,087,500, தொகையான படிகளுக்காக தொடர்புடைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு சுற்றறிக்கையின் பிரகாரம், வரிசை அமைச்சின் செயலாளர் மூலம் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,589,042 நட்டமொன்றாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் நட்டம் ரூபா 1,267,070 தொகையாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 321,972 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு கம்பனியின் வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்திக் காணப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் பதவியணி 03 பேருடனாக இருந்ததுடன் கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்டபதவியணியொன்றும் அங்கீகரிக்கப்பட்ட | புதவியணி ஆட்சேர்ப்பிற்காக நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் | விரைவாக கலைப்பு செயன்முறையை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் கொள்ளப்பட்டுள்ளது. வேண்டும்.
காணப்படவில்லை.